

முதலமைச்சர் அவர்கள் தூத்துக்குடி காமராஜ் கல்லூரியில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர்கல்வி உறுதித் திட்டத்தின் கீழ், புதுமைப்பெண் திட்டத்தின் விரிவாக்கத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில் புதுமைப்பெண் திட்டம் விரிவாக்கத்தினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்து மாணவிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.



கோவையில் வரலாறு காணாத அளவில் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றது. கோவையில் ரூ30 கோடியே, 93 லட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் செந்தில் பாலாஜி துவக்கி வைத்தும், புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். உடன், மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, மாவட்டக் கழக செயலாளர்கள் நா.கார்த்திக் தொ.அ.ரவி , தளபதிமுருகேசன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி பா.ராஜ்குமார் ,கே.ஈஸ்வரசாமி, மேயர் ரங்கநாயகி, மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், துணைமேயர் வெற்றிச்செல்வன், , மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், மண்டல தலைவர்கள் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், மீனாலோகு, தனலட்சுமி,தெய்வாணை தமிழ்மறை, பணிகள் குழு தலைவர் சாந்தி முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போட் ராஜேந்தர், சோமு, நாகராஜ் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கும்பகோணத்தில் துணை முதல்வர் பிறந்தநாள் - விளையாட்டுப் போட்டி!

## அமைச்சர் கோவி.செழியன், மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. தொடங்கி வைத்தனர்!

தஞ்சாவூர் ஜன.2-

கும்பகோணத்தில் வடக்கு மாவட்ட திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு ஒற்றையர் மற்றும் இரட்டையர் இறகு பந்து போட்டியை மாநிலங்களவை உறுப்பினர் தொடங்கி வைத்தார்.

கும்பகோணத்தில் வடக்கு மாவட்ட திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு ஒற்றையர் மற்றும் இரட்டையர் இறகு பந்து போட்டி ஏ. ஆர்.ஆர். மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இந்த போட்டியை மாநிலங்களவை உறுப்பினரும் மாவட்ட செயலாளருமான சு.கல்யாணசுந்தரம், உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி செழியன் துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் முன்னாள் மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாநகராட்சி துணை மேயர் சு.ப.தமிழழகன், மாவட்ட அவைத் தலைவர் க.நசீர் முகமது, ஒன்றிய செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், எஸ்.கே.முத்துச் செல்வம், கூகூர் சி.அம்பிகாபதி, கோ.க.அண்ணாதுரை, இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ஜி.கே.எம்.ராஜா, மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர்கள் வீ.சிவகுமார், துணை அமைப்பாளர்கள் வசந்தராஜ், சுவாமிநாதன், ஸ்டாலின், ஸ்ரீராம், சங்கர், மற்றும் நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்த போட்டியில் 10 வயது முதல் 19 வயது வரை ஐந்து பிரிவுகளாக நடைபெற்றன.

இதில் தஞ்சை மாவட்டத்திலிருந்து 300 கற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். போட்டியில் வெற்றி பெறும் நபர்களுக்கு முதல் பரிசாக 3000, இரண்டாம் பரிசாக 2000, மூன்றாம் பரிசாக 1000, ரூபாய் வழங்கப்பட்டது. கலந்து கொண்ட அனைவருக்கும் ஆறுதல் பரிசும் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

# புதுக்கோட்டையில் புதுமைப் பெண் திட்டம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி – முன்னணியினர் பங்கேற்பு!

புதுக்கோட்டை ஜன.2

தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழ்நாடு தலைமைச்சர் மு.க.ஸ்டாலின் புதுமைப் பெண்திட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக்கல்லூரியில் புதுமைப்பெண் திட்ட விரிவாக்கத்தை தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, மாவட்ட ஆட்சியர் அருணா, தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி ஆகியோர் தொடங்கி வைத்தனர். மேலும் இதில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னதுரை, துணை மேயர் எம். லியாகத் அலி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இதில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தாய் வழியில் ஆறாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்ற தகுதியான 1371 மாணவிகளில் 500 மாணவிகளுக்கு மாதம் தோறும் தலா 1000 பெறுவதற்கான டெபிட் கார்டுகளை அமைச்சர் எஸ். ரகுபதி வழங்கினார்.

இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கூறுகையில்:

அ.தி.மு.க. போராட்டம் என்பது எள்ளி நகைக்கக் கூடிய ஒன்று. அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் தான் பொள்ளாச்சி சம்பவம் நடைபெற்றது. அப்போது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க மாட்டேன் என்று அடங்காப்பிடாரித்தனமாக மறுத்தவர்கள் அவர்கள். கடைசியாக பல்வேறு போராட்டங்களை நடத்தி நாங்கள் அன்று நடவடிக்கை எடுக்க வைத்தோம்.

இன்று நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம் யாரையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் எங்களுக்கு கிடையாது இப்பொழுது அதிமுக போராட்டம் என்பதெல்லாம் வீண் வேஷம். நாங்கள் இருக்கிறோம் என்று காண்பித்து கொள்வதற்காக அ.தி.மு.க.வினர் இப்படி கபட நாடகத்தை நாடுகிறார்கள். தங்கள் மீது உள்ள குற்றச்சாட்டுகளை மறந்து விட்டு எங்கள் மீது பழி சுமத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு பார்க்கிறார்கள். பொள்ளாச்சி சம்பவம் ஒன்று போதும் அவர்கள் ஆட்சி காலத்தில் எப்படி இருந்தது என்று. அதற்குப் பிறகு என்னென்ன நடந்தது அவர்கள் ஆட்சியில் என்பதெல்லாம் ஏற்கனவே நான் விளக்கி விட்டேன்.

அண்ணா பல்கலைக் கழக வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்ற தேவை இல்லை என்று நீதிமன்றமே கூறி விட்டது. மூன்று துணை ஆணையர்களை நியமித்து விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

அண்ணா பல்கலைக்கழக வழக்கில் எஃப்.ஐ.ஆர். கசிந்த விவகாரம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. எஃப்.ஐ.ஆர். கசிந்தது யார் மூலமாக இருந்தாலும் நியமிக்கப்பட்ட மூன்று பேர் கொண்ட குழு விசாரித்து நடவடிக்கை எடுக்கும்.

இந்த ஆட்சியில் தான் பெண்களுக்கு பாதுகாப்பு இருக்கிறது. பெண்கள் வெளியே வருகிறார்கள். மகாத்மா காந்தி நடு இரவில் ஒரு பெண் தங்க நகைகளை அணிந்து கொண்டு சுதந்திரமாக நடமாடி சென்று பத்திரமாக வீடு திரும்பிகின்ற பொழுது சுதந்திரம் என்று தெரிவித்திருந்தார். அது இந்தியாவிலேயே கடைப்பிடிக்கக் கூடிய மாநிலமாக தமிழ்நாடு தான் இருக்கிறது. மற்ற மாநிலத்திற்கு எல்லாம் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் சென்று பார்த்துவிட்டு வரட்டும். அங்கு பெண்களின் நிலைமை எப்படி இருக்கிறது இரவு 10 மணிக்கு மேல் நடமாட முடிகிறதா என்று. நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகின்ற விஜய்க்கு இதைத்தான் பதிலாக சொல்கின்றோம். தயவுசெய்து வெளியே சென்று பாருங்கள். பக்கத்து மாநிலம் பீகாரில் சென்று பாருங்கள் ஒரிசாவில் பாருங்கள் வேறு மாநிலத்திற்குச் சென்று பாருங்கள் அங்கே எல்லாம் பார்த்து விட்டு வந்து இந்தியாவிலேயே பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு என்று நிரூபிக்கின்றோம். இல்லையென்றால் நீங்கள் என்ன சொன்னாலும் மக்கள் எங்களை நம்புவார்கள் மக்கள் மத்தியில் நாங்கள் விளக்குவோம்.

யார் அந்த சார் என்பது அந்த சாருக்கு தான் தெரியும். யார் அந்த சார் என்பது விசாரணையில் தெரிய வரும் நாங்கள் இல்லை அந்த சார் எல்லாம்.

அரசு விதிகளுக்கு உட்பட்டதால் அரசு அதிகாரிகள் பேட்டி கொடுக்கிறார்கள். இந்த விவகாரத்தில் அதிகாரிகள் அவசரப்பட்டார்களா என்பதை ஐ.பி.எஸ். படித்த மூன்று பெண் துணை ஆணையர்களை நீதிமன்றம் நியமித்துள்ளது. அந்தக் குழு விசாரித்து உண்மையை வெளிக் கொண்டுவரும்.

எங்கடா காலையில் பிணம் விழும் என்று பிணம் கொத்தி கழுகு என்று சொல்வதை போல எந்த பிணமாவது விழுந்தால் அதை வைத்து அரசியல் ஆதாயம் தேடலாமா என்று பார்க்கின்ற பரிதாபகரமான நிலையில் லண்டன் சென்று படித்துவிட்டு வந்திருக்கின்ற பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலையின் நிலைமை இருக்கிறது என்று தெரிவித்தார்.

### இன்று (ஜனவரி 2 ஆம் தேதி) முதல்

# சென்னை மின்சார ரயில்களின் அட்டவணை மாற்றம்!

## தெற்கு ரயில்வே அறிவிப்பு!

சென்னை, ஜன. 2–

ஜனவரி 1, 2025 புதிய ரயில் அட்டவணை அமலுக்கு வருகிறது. இந்திய ரயில்வே அறிமுகம் செய்துள்ள புதிய ரயில் அட்டவணையில் ரயில் வழித்தட வரைபடம், ரயில் நிலையம் மற்றும் ரயில்களின் எண்கள், ரயில்களின் பெயர், பயண நேரம் உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன. மேலும் ரயில் டிக்கெட் முன்பதிவு தொடர்பாக விவரங்கள், தட்கல், டிக்கெட் கட்டணம் திரும்ப பெறும் முறைகள், ரயில் பயண சலுகைகள், சிறப்பு பயண திட்டங்கள் ஆகியவையும் இருக்கின்றன. இந்நிலையில் சென்னையில் அனைத்து மின்சார ரயில்களின் அட்டவணை இன்று (ஜனவரி 2ம் தேதி) முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கடற்கரை – செங்கல்பட்டு, கும்மிடிப்பூண்டி உள்பட அனைத்து வழித்தட மின்சார ரயில்களின் நேரம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "01.01.2025 முதல் அமுலுக்கு வரும் வகையில் மெயில்/எக்ஸ்பிரஸ் ரயில் நேர மாற்றங்களைக் கருத்தில் கொண்டு பயணிகளின் தேவை மற்றும் செயல்பாட்டுக் காரணங்களைக் கருத்தில் கொண்டு, அனைத்துப் பிரிவுகளுக்கும் புறநகர் ரயில் நேரங்கள் திருத்தப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட புறநகர் கால அட்டவணை இன்று (02 ஜனவரி 2025, – வியாழன்) முதல் நடைமுறைக்கு வரும் மற்றும் வார நாள் ரயில் சேவைகளுக்கு மட்டுமே இது பொருந்தும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 2–ம் தேதி முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ள ரயில்களின் அட்டவணை முழு விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

